

திண்டுக்கல் நாகல் நகர் மேட்டுப்பட்டி ஸ்ரீ மாதா புவனேஸ்வரி ஆலயத்தில் நடந்த நவராத்திரி விழா 7-ம் நாளான நேற்று ஸ்ரீசைலம் பிரம்மராம்பிகை வளையல் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்த புவனேஸ்வரி அம்மன். படம்: நா.தங்கரத்தினம்

### மதுரை ஆயுதப்படை மைதானத்தில்

# காவல் துறை சார்பில் நீத்தார் நினைவு தின அஞ்சலி

● மதுரை

காவல்துறை சார்பில் மதுரை ஆயுதப்படை மைதானத்தில் நீத்தார் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

பணியின்போது நாட்டுக்காக வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையினரை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் அக்.21-ம் தேதி நீத்தார் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. அதன்படி நேற்று காலை மதுரை மாநகர் ஆயுதப்படை மைதானத்தில் நீத்தார் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதில் 2022 செப்.1 முதல் 2023 ஆக. 31-ம் தேதி வரை வீரமரணமடைந்த ராணுவம், காவல் துறையைச் சேர்ந்த 188 பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தென் மண்டல ஐஜி நரேந்திரன் நாயர் தலைமையில் மதுரை சரக டிஐஜி ரம்யா பாரதி, மாநகர காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், மதுரை மாவட்ட எஸ்பி சிவபிரசாத் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். மாநகர காவல் துணை ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸார் கலந்து கொண்டனர்.



மதுரை ஆயுதப்படை மைதானத்தில் அஞ்சலி செலுத்திய தென் மண்டல ஐஜி நரேந்திரன் நாயர் உள்ளிட்டோர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி.

### நீட் தேர்வை ரத்து செய்ய கோரி திமுக சார்பில் கையெழுத்து இயக்கம்

● திண்டுக்கல்

திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரத்தில் கையெழுத்து இயக்கம் நேற்று நடைபெற்றது.

'நீட் விலக்கு-நம் இலக்கு' என்ற தலைப்பில், 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகள் பெறும் நிகழ்ச்சியை, திண்டுக்கல்லில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தனது இல்லத்தில் இருந்தபடி, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரும் படிவத்தில் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார். திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ராஜப்பா, கிழக்கு மாவட்ட திமுக அமைப்பாளர் கணேசன், மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதேபோல், ஒட்டன்சத்திரத்தில் நடந்த நிகழ்ச்சியை, ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் வீ.பி. ராஜன் தொடங்கி வைத்தார். வேடசந்தூர் எம்எல்ஏ காந்தி ராஜன், மேற்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ராஜாமணி, மாணவரணி மாநில துணைச் செயலாளர் பொன்ராஜ், இளைஞரணி மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஹரிஹரசுதன், ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைவர் திருமலைச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### பொதுமக்களிடம் ரூ.100 கோடிக்கு மேல் சைபர் முறைகேடு

# நாடு முழுவதும் 76 இடங்களில் சிபிஐ சோதனை

● புதுடெல்லி

இந்தியர்களுக்கு ரூ.100 கோடிக்கு மேல் இழப்பை ஏற்படுத்திய சைபர் முறைகேடு தொடர்பாக, நாடு முழுவதும் 76 இடங்களில் சிபிஐ நேற்று சோதனை நடத்தி கம்ப்யூட்டர் சாதனங்களை பறிமுதல் செய்தது.

இதுகுறித்து சிபிஐ செய்தி தொடர்பாளர் கூறியிருப்பதாவது:

அப்பாவி இந்தியர்களை ஏமாற்றி ரூ.100 கோடிக்கு மேல் கிரிப்டோ ஊழல் நடைபெற்றுள்ளது. இது தவிர சைபர் நிதி முறைகேடுகள் தொடர்பாக 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நிதி உளவுப் பிரிவு அளித்த தகவல்கள்படி இந்த வழக்குகளை சிபிஐ பதிவு செய்தது.

தொழில்நுட்ப உதவிகள் அளிப்பதாக கூறி, வெளிநாட்டினரை கால் சென்டர் மையங்கள் ஏமாற்றியதாக அமேசான் மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனங்களும் 2 புகார்கள் அளித்தன. இதனால் சைபர் முறைகேடுகளை கண்டுபிடிக்க 'ஆபரேஷன் சக்ரா-2' என்ற பெயரில் நாடு முழுவதும் 9 கால் சென்டர்கள் உட்பட 76 இடங்களில் சிபிஐ அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை சோதனை நடத்தினர்.

உ.பி., ம.பி., கர்நாடகா, இமாச்சலப் பிரதேசம், ஹரியாணா, கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப், டெல்லி மற்றும் மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

அப்போது 32 செல்போன்கள், 48 லேப்டாப்கள், ஹார்ட் டிஸ்க்குகள், மற்றும் பென் டிரைவ்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஏராளமான வங்கி கணக்குகளும் முடக்கப்பட்டன. அப்பாவி மக்களை ஏமாற்ற பயன்படுத்தப்பட்ட 15 இ-மெயில் முகவரிகளும் முடக்கப்பட்டன.

இவ்வாறு சிபிஐ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

### தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன்

# சாதிவாரி கணக்கெடுப்பை இணைத்து நடத்த வேண்டும்

## பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

● சென்னை

தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பை இணைத்து நடத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் சமூக நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்டிட, சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பை இணைத்து நடத்திட வேண்டும்.

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டி, வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்குக் கொண்டு செல்வதற்கும், வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவை உருவாக்குவதற்கும் ஏதுவாக, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன், விரிவானதொரு சாதிவாரிக் கணக்கெடுப்பை இணைத்து நடத்துவதற்கான ஏற்பாட்டினை மத்திய அரசு உடனடியாக தொடங்கிட வேண்டும். 2021-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறாத நிலையில், வரவிருக்கக்கூடிய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரியான கணக்கெடுப்பை இணைத்து நடத்திட வேண்டும்.

மாநில அளவில் இதற்கான நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், இந்தியாவில் சட்டப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு, முக்கியமான சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, சமூக நீதி, சமத்துவம் போன்றவற்றை நிலைநாட்டிட இயலும். சமமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திட இயலும்.

1931-ல் இந்தியாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடந்த 90 ஆண்டுகளில் நம் நாட்டின் மக்கள்தொகை மற்றும் சமூக பொருளாதார நிலப்பரப்பு பல மாற்றம் அடைந்துள்ளது. ஆனால், பின்தங்கிய பிரிவினர் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

பிஹார் போன்ற சில மாநில அரசுகள் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பை வெற்றிகரமாக நடத்தியுள்ளன. மேலும், சில மாநிலங்கள் அந்த நடவடிக்கைகளை அறிவித்துள்ளனர். இந்த மாநிலங்களின் குறிப்பிட்ட முன்முயற்சிகள் மற்றும் அதன் தரவுகளின் முடிவுகள் சமூகம் மற்றும் அதன் தேவைகளை பற்றிய நுண்ணறிவுகளை வழங்குவதில் பயனுள்ளதாக இருந்தாலும், உள்ளீடுகள் மற்றும் செய்முறைகளின் நாடு தழுவிய ஒப்பீட்டின் நன்மை அவற்றுக்கு இல்லை.

எனவே, முக்கியமான சாதி தொடர்பான உள்ளீடுகளுடன் கூடிய இந்திய சட்டப்பூர்வமான மக்கள்தொகை கணக்கெடுப்பு மட்டுமே சமூக நீதியை நிலைநிறுத்துவதற்கான பொருத்தமான தளத்தை வழங்க முடியும்.

தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் மட்டுமே நமது சமூகத்தின் சாதிய அமைப்பு மற்றும் சமூக பொருளாதாரம் பற்றிய விரிவான, நம்பகமான தரவுகளை வழங்க முடியும்.

அதனால், தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பை இணைத்து நடத்த வேண்டும். இது வலிமையான இந்தியாவை உருவாக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் இணைத்து நடத்த வேண்டும் என்ற தனது கோரிக்கை மீது உங்கள் தனிப்பட்ட தலையீட்டை எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# அல் உம்மா இயக்க தலைவர் பாஷாவுக்கு நெஞ்சு வலி

## கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதி

● கோவை

கோவை குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அல் உம்மா இயக்கத் தலைவர் பாஷாவுக்கு திடீர் நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து, கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



பாஷா

கோவை கோட்டைமேடு பகுதியை சேர்ந்தவர் பாஷா (83). அல்-உம்மா இயக்கத் தலைவரான இவர், கோவையில் 1998-ல் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக கோவை தனி நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக கோவை மத்திய சிறையில் பாஷா அடைக்கப்பட்டிருந்தார். இதற்கிடையே, கடந்த 16-ம் தேதி அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் இடைக்கால பரோலில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், அவர் கோவை ராமநாதபுரம் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று காலை பாஷாவுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. தொடர்ந்து அவர் கோவை கே.ஜி. மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

### டோக் பெருமாட்டி கல்லூரியில் ஷேக்ஸ்பியர் நாடகம்

● மதுரை

மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியின் முதுகலைத் துறை ஆங்கில ஆராய்ச்சி மையம் சார்பில் வில்லியம் ஷேக்ஸ்பியர் இயற்றிய 'அ மிட்சம்மர் நைட்ஸ் ட்ரீம்' எனும் இசை நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்நாடகத்தை துணை முதல்வர் பியூலாஜெயஸ்ரீ தலைமையிலான மாணவிகள் அரங்கேற்றினர். ஆங்கில உதவிப் பேராசிரியர் கீர்த்தனா நாடகத்தை இயக்கினார். உதவிப் பேராசிரியர்கள் ஷேரன் ஆலிஸ் கிறிஸ்டி இசைக்குழுவை வழி நடத்தினார்.

உதவிப் பேராசிரியர்கள் ஜெபப்ரீத்தி நான்சி, ஹேமலட்சுமி, ஸ்ரீலேகா, அஸ்மத் அசீனா, ஷேரன் ஜீவராஜாத்தி ஆகியோர் நாடக நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

### மாநில அளவிலான விளையாட்டு போட்டியில் பங்கேற்க

# ஓசிபிஎம் பள்ளி மாணவிகள் 91 பேர் தேர்வு

● மதுரை

பள்ளி கல்வித் துறை சார்பில் நடைபெற உள்ள மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க மதுரை ஓசிபிஎம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் 91 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பள்ளி கல்வித் துறை சார்பில் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் பூப்பந்து, கையுந்து பந்து, கோ கோ, கூடைப்பந்து, தடகளம் ஆகியவற்றில் வெற்றி பெற்ற மதுரை ஓசிபிஎம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் 91 பேர் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

இம்மாணவிகளை பள்ளி தாளாளர் ஏ.டேவிட் ஜெபராஜ், தலைமையாசிரியர் என்.மேரி, உடற்கல்வி இயக்குநர் ஆர்.ராஜேஸ்கண்ணன், பி.சர்மிளா ஜெ.பெர்சீஸ், உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோர் பாராட்டினர்.



மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க உள்ள ஓசிபிஎம் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுடன் ஆசிரியர்கள்.

### விளையாட்டு திறனை வெளிக்கொண்டு வரும்

# 'வாக்கரூ ஸ்போர்ட்ஸ்' ஷூ வாக்கரூ நிறுவனம் அறிமுகம்

● சென்னை

இந்தியாவில் உள்ள காலணி நிறுவனங்களில் முன்னணி நிறுவனமாக திகழும் வாக்கரூ விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் தனித்துவமான வடிவமைப்புடன் 'வாக்கரூ ஸ்போர்ட்ஸ்' என்னும் புதிய ஷூவை அறிமுகம் செய்துள்ளது.

இதையொட்டி ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் விளையாட்டு திறமையை வெளிக்கொண்டு வரவும் அதை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் 'உள்ளத்தில் துள்ளுதே ஸ்போர்ட்ஸ்' என்ற புதிய பிரச்சார விளம்பரத்தை வாக்கரூ அறிமுகம் செய்துள்ளது. குறைந்த விலையில் சிறந்த, தரமான மற்றும் இன்றைய காலத்துக்கேற்ற நவநாகரிக காலணிகளை வடிவமைப்பதில் வாக்கரூ நிறுவனம் சிறந்து விளங்குகிறது. ஒவ்வொரு விளையாட்டு வீரர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அவர்களின் விளையாட்டுகளுக்கு ஏற்ற ஸ்போர்ட்ஸ் ஷூக்களை அறிமுகம் செய்துள்ளது. இவை 50 விதமான டிசைன்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் விலை 699 ரூபாய் முதல் தொடங்குகிறது. ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீரர்கள் அணியும் வகையில் இந்த புதிய ஷூக்களை வாக்கரூ தயாரித்துள்ளது.




இந்த ஸ்போர்ட்ஸ் ஷூக்கள், இன்-சோல் குஷனிங், அதிர்வுகளை தாங்கும் திறன் கொண்ட இவிஏ மிட்சோல், கால்களுக்கு பாதுகாப்பை வழங்கும் ஸ்லிப்-ரெசிஸ்டண்ட், உள்ளங்கால்கள் மற்றும் கால்களை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும் வகையில் காற்று உள்புகும் வகையிலான மெஷ் மற்றும் எளிதாக சுத்தம் செய்யும் வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் அறிமுகம் குறித்து வாக்கரூ இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் நௌஷாத் கூறும்போது, "எங்களின் வாக்கரூ ஸ்போர்ட்ஸ் ஷூக்கள் உங்களிடம் மறைந்திருக்கும் விளையாட்டு வீரரை வெளிக்கொண்டு வரும் சக்தி வாய்ந்தவையாகும். இவை நவீன தொழில்நுட்பத்தில் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன. இவை விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் வழங்கும். குறைந்த விலை கொண்ட இந்த ஷூக்கள் ஒவ்வொரு விளையாட்டு வீரரின் வாழ்க்கை பயணத்தில் சிறந்ததொரு மாற்றத்தை ஏற்படுத்தும்" என்று தெரிவித்தார்.

# ஸ்ரீ அரபிந்தோ மீரா கல்வி குழுமம் சார்பில் நவராத்திரி விழா

● மதுரை

நவராத்திரி விழாவை முன்னிட்டு, மதுரை ஸ்ரீ அரபிந்தோ மீரா கல்விக் குழுமம் சார்பில், அரோபனா இந்தியன் பள்ளியில் அனைத்து பள்ளிகளுக்கு இடையேயான நவராத்திரி யூலோஜைஸ்-4 போட்டிகள் நடைபெற்றன.

பள்ளியின் தாளாளர் சி.சந்திரன் தலைமை வகித்தார். நிர்வாக இயக்குநர் எம்.சி.அபிலாஷ், இயக்குநர் நிக்கி புளோரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரோபனா இந்தியன் பள்ளி முதல்வர் அந்துவன் கேபிரியல் வரவேற்றார்.

இந்தியப் பாரம்பரியம், பண்பாட்டை பற்றிய விழிப்புணர்வு, நவராத்திரியின் கோட்பாடுகள் குறித்த தலைப்புகளில் நடனம், பாடல், ஸ்லோகம் கூறுதல், பொம்மலாட்டம், கதை சொல்லுதல், இசைக் கருவிகள் வாசித்தல், மகாபாரத அவதாரப் பெண்களின் மாறுவேடப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் எல்கேஜி முதல் பிளஸ் 2 வரையிலான மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளில், அரோபனா இந்தியன் பள்ளி, ஸ்ரீ அரபிந்தோ மீரா யுனிவர்சல் பள்ளி மற்றும் விஸ்டம் வெல்த் பள்ளி முதல் பரிசு சுழற்கோப்பை மற்றும் ரூ.25,000 பரிசு வென்றனர். இரண்டாம் பரிசாக ரூ.15,000 சிவகாசி நாடார் மேல்நிலைப் பள்ளியும், மூன்றாம் பரிசாக ரூ.10,000 தி டிவிஸ் பள்ளியும் வென்றன. ஆசிரியர்களுக்கு நடனத்துக்கான சிறப்பு பரிசும் வழங்கப்பட்டது.

இப்போட்டிகளில் மதுரை, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த 22 பள்ளிகளின் மாணவ, மாணவியர் பங்கேற்றனர்.




மதுரை ஸ்ரீ அரபிந்தோ மீரா கல்விக் குழுமம் சார்பில் நடந்த நவராத்திரி விழா போட்டியில் முதல் பரிசு வென்ற அரோபனா இந்தியன் பள்ளி, ஸ்ரீ அரபிந்தோ மீரா யுனிவர்சல் பள்ளி மற்றும் விஸ்டம் வெல்த் பள்ளி மாணவர்கள்.

### எஸ்பிஓஏ பள்ளியில் இலக்கிய விழா

● மதுரை

மதுரை எஸ்பிஓஏ பள்ளியில் இலக்கிய விழா பள்ளி முதல்வர் எஸ்.சீதா லட்சுமி தலைமையில் நடைபெற்றது. எஸ்பிஓஏ பதின்ம மேல்நிலைப் பள்ளி முதல்வர் லதா திரவியம் முன்னிலை வகித்தார்.

மாணவிகள் சஞ்சனா ஸ்ரீநிதி, தியாககணேஷ், சங்கமித்ரா, ரூபிகா, சஞ்சீவனி, கங்காதாரணி ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர்.

தலைமை ஆசிரியர் அனிதா கரோலின், உதவித் தலைமை ஆசிரியர்கள் வித்யா தனலட்சுமி, பொற்கொடி பங்கேற்றனர்.

### மருத்துவ முகாம்

● மதுரை

மதுரை மத்திய சிறையில் யாதவா கல்லூரி, இந்திய பல் மருத்துவ சங்க மதுரை கிளை மற்றும் பிரீத்தி மருத்துவமனை இணைந்து கைதிகளுக்கான சிறப்பு பல் மருத்துவ முகாமை நடத்தின. மதுரை சிறைத் துறை டிஐஜி பழனி, சிறை கண்காணிப்பாளர் பரசுராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


UJJIVAN SMALL FINANCE BANK

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
**கிளை அலுவலகம்:** எண்.19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சள்மாட்டு காலனி, நாகு நகர், மதுரை, பெத்தனியாபுரம் 625016

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 30.08.2023 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித்தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1666210170000001<br>1.Mr.P.மலர்கொடி<br>2.Mrs.செய்பூரணி | (i) 12.07.2021<br>(ii) 11.07.2021 அன்றுள்ளபடி ₹ 11,39,056/- (ரூபாய் பதினோறு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்து ஆறு மட்டும்)<br>(ii) 07.03.2022 (அடையாளபூர்வ) & 09.06.2023 (நேரடியான) | ₹ 16,53,554/- (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) | ₹ 11,25,000/- (ரூபாய் பதினோரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) | ₹ 1,12,500/- (ரூபாய் ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) |

**சொத்து விவரம் : ஐட்டம் எண்.**1: பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.97/2, புதிய சர்வே எண்.97/2A, **எருமார்பட்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, அம்மாமுத்தம்பட்டி கிராமம், உசிலம்பட்டி யூனியன், மதுரை மாவட்டம் என்னும் முகவரியில் 3 சென்டு நிலம் இதில் கிழக்கு பகுதியில் 648 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 18 அடி, வடக்கு தெற்காக மேற்கு மற்றும் கிழக்கு திசையில் 36 அடி, ஆகமொத்தம் 648 சதுர அடி. எல்லைகள்: மொக்கராஜ்-க்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, வெள்ளையத்தேவர் (எ) பாண்டி-க்கு சொந்தமான சொத்துக்கு கிழக்கு, மலர்கொடி-க்கு சொந்தமான சொத்துக்கு மேற்கு, 4 அடி கிழக்கு - மேற்கு வழிப்பாதைக்கு தெற்கு.

**ஐட்டம் எண்.**2: பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.97/2, புதிய சர்வே எண்.97/2A, **எருமார்பட்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, அம்மாமுத்தம்பட்டி கிராமம், உசிலம்பட்டி யூனியன், மதுரை மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு பகுதியில் 4 சென்டு நிலம் இதில் 648 சதுர அடி நிலம்** மற்றும் அதனுடன் பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து அனுமந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 18 அடி, வடக்கு தெற்காக மேற்கு மற்றும் கிழக்கு திசையில் 36 அடி, ஆகமொத்தம் 648 சதுர அடி. எல்லைகள்: மொக்கராஜ்-க்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, சேகர்-க்கு சொந்தமான சொத்துக்கு கிழக்கு, பூவுந்தை-க்கு சொந்தமான சொத்துக்கு மேற்கு, 4 அடி கிழக்கு - மேற்கு வழிப்பாதைக்கு தெற்கு.

**மேல் குறிப்பிட்டுள்ள ஐட்டம் எண்.1 மற்றும் ஐட்டம் எண்.2-ன் மொத்தம் 1296 சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம், கதவு எண்.2, சொத்து வரி மதிப்பீட்டு எண்.112 மற்றும் பிற உரிமைகள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவை.**

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 29.11.2023 மதியம் 12.00 மணியிலிருந்து 1.00 மணி வரை**

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி | சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் |
|---|---|
| 28.11.2023 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | 27.11.2023 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
**Mr.G.நடராஜன் - Mob : 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob : 94455 08743**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob.No. 98138 87931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 21.10.2023
இடம்: பெங்களூர்

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்